மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மகளிருக்காக தனியாக விடப்படுகிற பஸ்களைப்பற்றி பாராட்டியதற்கு உறுப்பினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் ஸ்பெஷல் பஸ்களுக்கு இப்பொழுது சென்னை நகரத்தில் பிரயாணிகளிடமிருந்து நல்ல வரவேற்பு கிடைத்துக்கொண்டு வருகிறது. பெண் கண்டக்டர்களைப் போடுகிற விஷயத்தைப்பற்றித் தனியாக ஆலோசிக்கலாம். தற்பொழுது இருக்கிற சூழ்நிலையில் பெண் கண்டக்டர்களை நியமிப்பது அவ்வளவு சாத்தியமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

Altercation between passengers and driver of State Transport Bus.

* 78 Q.—THIRU K. VINAYAKAM :
DR. H. V. HANDE :

Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there was a dispute and heated exchanges between the passengers and transport workers in Theagarayanagar, Madras, in route No. 11-B on 9th December 1969;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) how the dispute was settled?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 9–12–1969 அன்று மாலை 5 மணியளவில் பாரிமுனையிலிருந்து 11-பி என் வழித்தடத்தில் செல்லும் எ. 742-ம் எண்ணுள்ள பேருந்தை அதன் வலவர், இராகவய்யா சாலையிலுள்ள பேருந்து நிறுத்துமிடத்தில் நிறுத்தவில்லை. எனவே, பயணிகள் கலக்கமுற்றனர். அதைத் தொடர்ந்து அவர்களுக்கும் வலவருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது.

(உ) விசாரணை நடத்தப்பட்டதில் வலவர் தவறு செய்ததாக முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, இரண்டாண்டுக் கால அளவுக்கு அவருடைய சம்பள உயர்வு தொடர்ந்து தள்ளிப்போடுமாறு தள்ளிப் போடப்பட்டது.

DR. H. V. HANDE : Is it not a fact that there is constant friction between conductors and the passengers and especially in recent times is it not a fact that because of the restriction of 25 standing passengers there has been lot of misunderstanding and the whole transport machinery is in a chaotic condition. What is the position of Government? What efforts are they going to make to see that at least hereafter there is proper relationship between passengers and conductors? How are the Government going to see that more number of passengers travel by the State Transport comfortably?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : போக்குவரத்துத் துறையில் பொது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அடிக்கடி சச்சரவு ஏற்படுகிறது என்று சொல்வது சரியல்ல. இந்தப் பிரச்னை சென்னை மாநகரத்தைப் பொறுத்திருக்கிற பிரச்னை.

1970 ஆகஸ்ட் 27]

போக்குவரத்துத் துறையில் பீக் ஹவர் பிராப்ளம், நெரிசல் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. இந்தப் பிரச்னையை சமாளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. மேற்கொண்டு பஸ்களை விடவும், மேற்கொண்டு சில சீர்திருத்தங்களை செய்வதற்குமான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. விநயகம் : சட்டப்படி, இந்த ட்ரான்ஸ்போர்ட் ரூல்ஸ் இருக்கின்றன. அதன் விளைவாக 25 பேர்களுக்கு மேல் ஏற்றக்கூடாது என்று விதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் அதிகமாக ஏற்றிக்கொள்ளுங்கள் என்று நேரடியாக, ப்ரைவேட் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்பது, அதிகார பூர்வமாகச் செல்லாது என்று சில கண்டக்டர்கள், ட்ரைவர்கள் மறுத்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வியோடு இது தொடர்பு கொண்டது இல்லை. அது ஒரு குறிப்பிட்ட நாளில் ஏற்பட்ட தகராறு பற்றியது. சில மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அந்த ஊழியர்களை அந்த இடத்திலேயே சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்றார்கள். அதிகாரி விசாரணை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். விசாரணைக்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, arising out of the main question is it not a fact that there is constantly trouble between the conductor and the passengers and if so, whether the Government will come forward to see that the trouble is put an end to? This trouble has been there for the last 3-1/2 years and three Ministers have held the Transport portfolio but nothing has happened. Still the same state of affairs continues without rectification. So, will the Hon. Minister at least see that a couple of routes are thrown open to the private operators so that there could be competition in this field. Already the Government have released a large number of buses for the long distance routes with the result that we do not have enough buses for the City. So, will the Government come forward to solve this vexatious problem which is eluding solution for the past several years?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : All attempts are being made seriously to rectify the defects. கனம் உறுப்பினர் தனியார்களை இதற்காக ஊக்குவிக்க வேண்டும் என்று சொல்வதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

பனை நுங்கு ஏற்றுமதி

*** 79 வின—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை நுங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு பனைவெல்ல சம்மேளனம் முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?